# திருக்குறள் வெளிப்படுத்தும் அறவொழுக்கங்கள் – ஓர் ஆய்வு

*திருமதி. சுதர்சினி சதீஸ்ஹரன்*
இலங்கை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7726

***ஆய்வுச்சுருக்கம்***

*ஒழுக்க விழுமியங்கள் சேர்ந்த சமண பௌத்த சமயங்களின் தோற்றம் காரணமாக அறநெறிக்காலம் என அழைக்கப்படும் சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் தோற்றம் பெற்றன. அக்காலத்தில் எழுந்த அனைத்து நூல்களும் அறம் சார்ந்தவையாகவே காணப்பட்டன. இதனால் தான் அக்காலத்தை அறநெறிக்காலம் எனக்குறிப்பிடுகின்றனர். குறிப்பாக இங்கு அறத்தை மட்டுமே போதிக்கும் மதங்களான சமண பௌத்த மதங்களின் செல்வாக்கேகாரணமாக அமைந்தது. இவ்வாறே இக்காலத்தில் எழுந்த நூல்களைப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என அழைக்கப்பட்டன. அந்நூல்கள் பதினெட்டு காணப்படுகின்றன. அவற்றில் பதினொரு நூல்கள் நீதி நூல்களாக அமைந்துள்ளன. குறிப்பாக அந்நூல்கள் சமூகத்திற்கான நீதிகளான கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, காமம் இன்மை, கள்ளாமை எனும் பௌத்த மதத்தின் பஞ்சசீலக் கொள்கைகளை இவ்விலக்கியங்கள் முன்னிறுத்துவதை அவதானிக்கமுடிகின்றது. அத்தோடு இந்நீதி நூல்களை இயற்றிய புலவர்கள் அறநெறியைக் கடைப்பிடித்தவர்களாகவும் இதனால் அக்காலப் புலவர்கள் அறத்தைக் கடைப்பிடித்தனர். அறவொழுக்கங்கள் மனித வாழ்க்கைக்குத் தேவையான ஒன்றாகும். இருப்பினும் சமுதாயம் பின்பற்றும் வகையில் எடுத்துக் கூறும் அற இலக்கியங்களில் சிறப்பிடம் பெறும் இலக்கியமாக திருக்குறள் உள்ளது. ஆகவே இவ்வாய்வானது அறநெறிக்காலமாகக் கொள்ளப்படும் சங்க மருவிய காலத்தில் எழுந்த திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. திருக்குறளில் கூறப்படும் அறம் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். திருக்குறள் ஆய்வின் எல்லையாக அமைகின்றது. இவ்வாய்வு விபரண ஆய்வாக அமைகின்றது.*

## ஆய்வு அறிமுகம்

உலகப்பொதுமறை என எக்காலங்களுக்கும் எந்நிலைக்கும் பயன்படும் ஓர் அற்புதமான நூலாக திருக்குறள் காணப்படுகின்றது. இது மூன்று பால்களான அறத்துப்பால், பொருட்பால், காமத்து ப்பால் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. இந்நூல் மனித வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அறவொழுக்கங்கள், அரசியல், பண்பாடு, கலை, அறிவியல், மருத்துவம் முதலான வாழ்க்கைக்கு அவசியப்படும் அனைத்து விதமான விடயங்கள் பற்றியும் சிறப்பாக எடுத்துரைப்பதைக் காணமுடிகின்றது.

தமிழரின் அறவாழ்வைக் காட்டும் அறம் சார்ந்த நூல்களில் திருக்குறளுக்கு முக்கிய பங்குள்ளது. இந்நூல் சமூகத்தளத்தில் பாடப்பட்டபோதிலும் உலகனைத்திற்கும் பொதுவான கருத்துக்கள் அதிகம் காணப்படுகின்றன. திருக்குறளானது வாழ்க்கையை உயர்ந்ததாகவும் இனியதாகவும் ஆக்கிக்கொள்வதற்கும் பயன்படும் ஓர் அற்புதமான வழிகாட்டி நூலாக விளங்குகிறது. திருக்குறள் அறக்கருத்துக்களைத் தாங்கி வருவதற்கான முக்கிய காரணம் திருக்குறள் எழுந்த காலம் அறநெறிக்காலம் என்பதனாலாகும். இவ்விலக்கியம் இலக்கியம் எனும் நிலையில் நின்றுவிடாது வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது. அத்துடன் சராசரி மனிதன் அன்றாடம் வாழ்க்கையில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகவும் படைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். உலகில் வாழும் மனிதனை அவனது வாழ்வைப் பகுத்து திருக்குறளை அறம், பொருள், இன்பம் முதலானவற்றை அறிந்து அதன்படி வாழ்க்கை வாழ வழிகாட்டுகின்றது.

## திருக்குறளில் அறவொழுக்கங்கள்

தமிழர்வாழ்வில்அறம், பொருள், இன்பம் எனும் மூன்று கோட்பாடுகள் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றில் அறம் தலைமை உடையதாகக் கொள்ளப்படுகின்றது. இதனைப் புறநானூற்றுப் பாடல் விபரிப்பதை அவதானிக்கமுடியும்.

**“அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல”**
**(புறம் 31)**

அறம் எனும் சொல்லிற்கு கடமை, தருமம், கற்பு, புண்ணியம் எனப் பல பொருள் கொண்டு உரைப்பதை அவதானிக்கலாம். இவற்றையெல்லாம் சுருக்கமாகக் “நல்லவை செய்தலும் அல்லவை கடிதலும்” எனக் கூறுவது பொருத்தமாகும். தமிழர்கள்ந தத்தமது வாழ்க்கையில் அறத்தை ஒவ்வொரு காலகட்டத்திலும் கடைப்பிடித்ததோடு அறத்தையேமையமாகக்கொண்டிருந்தனர். குறிப்பாக ஒவ்வொரு துறையிலும் அறம் என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாததாய் பின்னிப் பிணைந்திருந்தமையை அவதானிக்கலாம். அவ்வகையில் இல்லறம், துறவறம், காதலறம், போரறம், அரசியலறம் என ஒவ்வொன்றிலும் அறத்தைக் கடைப்பிடித்துள்ளான் மனிதன். ஆகவே இவ்வாறு அறம் அறநெறிக்காலம் என சிறப்பிக்கப்படும் சங்கமருவிய காலத்தில் எழுந்த அற நூலான திருக்குறள் கூறும் அறவொழுக்கங்கள் பற்றி விரிவாக இக்கட்டுரையில் ஆராய்வோம்.

## இல்லறம்

ஆச்சிரம தர்மத்தில் இரண்டாவது நிலையாகக் கொள்ளப்படுவது இல்லற நிலையாகும். இந்நிலையில் இல்வான் ஒருவன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்கள் பற்றி விளக்கப்படுவதைக் காணமுடிகிறது. குறிப்பாக இல்லற தர்மங்களைக் கடைப்பிடித்து வாழுதல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இல்லற வாழ்வை அனுபவிக்கின்ற போது அறம், பொருள், இன்பம் எனும் மூன்று நெறிகளைப் பின்பற்றி அந்நெறிகளின் பொருட்டு தத்தமது வாழ்வினை ஒழுங்கமைத்துக் கொள்ளுதல் வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது. இல்வானுடைய கடமைகளாக அறநெறிகளைப் பின்பற்றுதல், தர்ம வழியில் பொருளீட்டல் என்பவைகளாகும். இதனை வள்ளுவப் பெருமான் தனது குறளில் வெளிப்படுத்தியுள்ளமையைக் காணலாம். மேல்வரும் பாடல் மூலம் குறிப்பிடப்படுகின்றது.

**“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை” (குறள்- 41)**

இல்லற நிலையில் வாழ்க்கை நடத்துபவன் தன்னை முழுமையாக இல்லற தர்மத்திற்கு அர்ப்பணித்து செயலாற்ற வேண்டும் எனக் கூறப்படுகிறது. அவ்வகையில் இல்லறத்தில் ஈடுபட்டுள்ள இல்வாழ்வான் துறவிகளுக்கும் வறுமையால் வாடுபவர்களுக்கும்

உற்றார் உறவினர் என்போரின் எவ்வித ஆதரவுமின்றி இறந்த கிடப்போர் முதலானவர்களுக்கு துணையாக இருந்து உதவிகள் பல ஆற்றவேண்டும் எனவும் வள்ளுவர் வலியுறுத்துவதை மேல்வரும் திருக்குறள் சான்றுபகர்கின்றது.

**"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை"".**

***(குறள்- 42)***

### இனிய சொற்கள் பேசுதல்

மனித வாழ்க்கையில் முக்கியம் பெறும் அறமாகக் கொள்ளப்படுவது இல்லறமாகும். இவ்வறத்தில் பின்பற்றப்பட வேண்டிய அறங்கள் அதிகம் காணப்படுகின்றன. குறிப்பாக இல்லற வாழ்வில் இல்லறம் நடத்துவோர் இனிமையாகப் பேசுதல் வேண்டும் என அறத்துப்பாலில் வள்ளுவர் வலியுறுத்து வதை அவதானிக்கலாம். அவ்வகையில் இனிமையாகப் பேசுதல் என்பது முக்கியமாக வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். இவ்வாறு பேசுவதன் மூலம் இல்லறத்தைக் கொண்டு நடத்த முடியும். அத்துடன் சமூகத்தில் நற்பிரஜையாகவும் போற்றுதற்குரியவராகவும் வாழ்வதற்கு மிக மிக அவசியமாகும். இதனை மேல்வரும் குறள் விளக்குகிறது.

**"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடிஇனிய சொலின்"** ***(குறள் 96)***

இல்லறம் நடத்துவோர் பிறர்க்கு நன்மை விளையும் பொருட்டு இனிமையாகப் பேசுவதன் மூலமாக ஒருவனுடைய தீங்குகள் அகன்று அறப் பண்புகள் வளரும் எனவும் இக்குறளினூடாக விளக்கிக் கூறப்படுகின்றது.

இல்லறத்தில் இனிமையான சொற்களையே பேச வேண்டும். அவ்வாறு பேசாது கடுமையான சொற்களைப் பேசுவது மரத்திலுள்ள பழங்களைப் பறிக்காது காய்களை மட்டும் பறித்துக் கொள்வது போன்றது என வள்ளுவர் உரைப்பதை அவதானிக்கலாம். அதாவது இனிமையான சொற்கள் இனிமையான சுவையான பழங்களைப் போன்றது என்றும் கடுமையான வார்த்தைகள் மற்றும் சொற்கள் காய்களைப் போன்று இனிப்பு சுவையற்ற சொற்களாக இருக்கும். ஆகவே இவ்வாறு கடுமையான சொற்களைப் பேசும் போது இனிமையான சொற்கள் மறைந்து காணப்படும் இதனால் சொற்களில் எவ்வித சுவைகளோ இருக்காது. எனவே இல்லறத்தோர் இனிமையான பழங்களைப் பறிப்பது போன்று இனிமையான சொற்களைப் பேச வேண்டும் என வள்ளுவர் வலியுறுத்துகின்றார். இதனை மேல்வரும் குறள் சான்று பகர்கின்றது.

**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று".**

***(குறள் 100)***

### அடக்கம்

இல்லறம் நடத்துவோருக்கு அடக்கம் என்பது முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. இப்பண்பைக் கடைப்பிடிப்பதனூடாக குணம், மொழி, உண்மை என்பவை தவறான வழியில் செல்லாமல் தடுத்து நிறுத்துவதுடன் இடத்திற்குத் தகுந்தாற் போல் அடக்கத்துடன் இருப்பதற்கான வழிவகையையும் ஆற்றுகிறது. இங்கு வள்ளுவன் தனது அறத்துப்பாலில் அடக்கம் பற்றிப் பேசுகின்றார். அடக்கத்திலும் குறிப்பாக நாவடக்கம் பெரிதும் சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ளது. நம்முடைய மனம் முதலானவற்றை அடக்குவதற்கு முதல் நம்முடைய நாவை அடக்குவதன் மூலம் நமக்கு வரும் ஆபத்துக்களைத் தடுத்துக் கொள்ளமுடியும் என்கிறார் வள்ளுவர்.

**"யாகவராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்இதழுக்குப் பட்டு"**

***(குறள் 127)***

இங்கு நாக்கை அடக்கி ஆள வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது. அவ்வகையில் நாக்கால் நாம் கூறிய வார்த்தைகளை மீளப் பெறுவதென்பது மிக கடினமான தொன்றாகும். குறிப்பாக நல்லவர் ஒருவர்

பற்றி நாம் தவறாக மனம் புண்படும்படி பேசி விட்டுப் பின்னர் கவலைக்குள்ளாகக் கூடிய நிலமை ஏற்படும். அத்துடன் எம்மால் பேசப்படும் வார்சுத்தை மற்றவர் விளங்கிக்கொள்ளும் வகையில் தெளிவான பேச்சாகவும் இருத்தல் வேண்டும். ஆகவே நாக்கு பதற்றப்படாமல் அடக்கத்துடன் இருப்பது தலையாயதாகும் என திருவள்ளுவர் அடக்கத்தில் நாவடக்கத்தை வலியுறுத்தி நிற்கின்றார்.

அடக்கம் ஒரு மனிதனுக்கு உயிருக்கும் மேலான செல்வமாகப் போற்றப்படுகின்றது. இதனால் அடக்கத்தை சிறந்த பொருளாகக் மனதில் கொண்டு காப்பாற்ற வேண்டும் எனவும் வள்ளுவம் வலியுறுத்துகின்றது. அவ்வகையில் மேல்வரும் குறள் இதனை விபரிக்கின்றது.

**"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனின் ஊஉங்கு இல்லை உயிர்க்கு"**

***(குறள்- 122)***

### பொருளீட்டல்

இல்வாழ்வான் தான் வாழத்தேவையான பொருட்களை ஈட்டும் போது அறவழியில் சென்று ஈட்ட வேண்டும் என்று வலியுறுத்துவதோடு அவ்வாறு ஈட்டும் பொருளே வாழ்வில் நிலைபெறும் எனவும் வள்ளுவப் பெருமான் வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. இதனை மேல்வரும் குறள் புலப்படுத்துகிறது.

**"பழியஞ்சிப் பாத்தூன் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்"**

***(குறள்- 44)***

### பெரும் பசி போக்கல்(உணவளித்தல்)

பெரும் பசி போக்குதல் என்பது ஒருவனது வாழ்வில் செய்ய வேண்டிய அறச்செயல்களில் ஒன்றாகும். அவ்வகையில் உண்ண வழியின்றி வாடுபவர்கள் பசியினால் வாடி மடிந்து விடுவர். காரணம் கொடிய பசியினாலேயாகும். ஆகவே இவ்வாறு பசியினால் வாடுபர்களுக்கு உணவளிப்பதன் மூலமாக தனது வாழ்நாட்களில் அறவாழ்க்கையை அடைந்துவிட்டான் என்றே கூறலாம். அத்தோடு உணவளித்தல் எனும் அறமானது ஒருவன் திரட்டிய பொருளைச் சேமித்து வைக்கும் பாதுகாப்பான இடமாகும் என வள்ளுவர் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகின்றது. இதனை மேல்வரும் குறள் சான்றுபகர்கின்றது.

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃ(து)ஒருவன்**
**பேற்றான் பொருள்வைப்(பு) உழி."**

***(குறள்- 226)***

### விருந்தோம்பல்

இல்லறத்தில் விருந்தோம்பல் பண்பு மிகச் சிறந்ததாகும். அழையாமல் வரும் விருந்தினர்களை வரவேற்று உணவு மற்றும் உடை என்பவற்றை அவர்களித்தலே ஆகும். இப்பண்பானது இல்லறத்தான் ஒவ்வொருவர்க்கும் இருக்கவேண்டிய முக்கிய பண்புகளில் ஒன்றாகும். இப்பண்பினை வள்ளுவம் விருந்தோம்பல் எனும் அதிகாரத்தில் வலியுறுத்துவதைக் காணமுடிகின்றது. அவ்வகையில் மேல்வரும் குறளினூடாக அறியலாம்.

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்(து)**
**இருப்பான்**
**நல்விருந்து வானத்த வர்க்கு"**

***(குறள்- 86)***

இக்குறளினூடாக இரவு நேரமாக இருந்தாலும் பகல் நேரமாக இருந்தாலும் இல்லத்திற்கு வரும் விருந்தினரை வரவேற்று விருந்து படைத்து மகிழ்விக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் இனிமேலும் விருந்தினர்கள் வருகிறார்களா என எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும் எனவும் அவ்வாறு காத்திருப்பவர்கள் வானவர்கள் விரும்பி வரவேற்றுப் போற்றும் நல்ல விருந்தினராவர் எனும் கருத்தும் விளக்கப்படுகின்றது.

### புலால் உண்ணாமை

திருவள்ளுவர் பெருமான் புலால் உண்ணுவதையும் உயிர்க்கொலையையும் கண்டிக்கிறார். குறிப்பாக திருக்குறள் புலால்

உண்ணுவதை மறுத்தலையும் உயிர்களைக் கொல்லாமைமையும் உயிர்க் கோட்பாடாகவே வைத்துள்ளது எனலாம். திருக்குறளில் 26வது அதிகாரம் புலால் மறுத்தலையும் 33வது அதிகாரம் கொல்லாமையையும் எதிர்ப்பதைக் கவனிக்கலாம். குறிப்பாக புலால் மறுத்தல் பற்றி எடுத்துரைக்கும் குறளானது உயிரைக் கொன்று நாம் உண்ணும் இறைச்சியானது எம்மில் ஏற்படும் புண்ணைப் போன்றது என்று கூறப்படுகின்றது. அத்துடன் வேறு ஒரு உயிரினத்தின் புண் எனும் அருவருப்புத் தன்மையை உள்ளத்தால் உணர்கின்றவர்கள் அருவருப்பான இறைச்சியை யாருமே உண்ணமாட்டார்கள் என்கிறது. இதனைப் புலப்படுத்தும் குறள் மேல்வருமாறு சான்றுபகர்கின்றது.

**"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறி(து) ஒன்றின்**
**புண்அது உணர்வார்ப் பெறின்."**
**(குறள்- 257)**

கொல்லாமை எனும் அதிகாரம் மூலமாக கொல்லாமை எனப்படும் அறப் பண்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. அவ்வதிகாரத்தில் மற்றவருடைய உயிரால்தான் தம் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டும் எனும் ஓர் இடர்பாடான சூழ்நிலை உண்டானால் தம் உயிரைக் காத்துக் கொள்ளல் வேண்டும் என்பதற்காக அப்பாவி உயிரைப் போக்கும் கொடிய கொலைச் செயலைச் செய்யாதிருக்க வேண்டும் எனக் கொல்லாமை அதிகாரம் வலியுறுத்தி நிற்கின்றது. சான்றாக மேல்வரும் குறள் அமைகிறது.

**"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி(து)**
**இன்னுயிர் நீக்கும் வினை."(குறள்- 327)**

## தவம்

திருவள்ளுவர் பெருமான் மனிதனானவன் தவம் மேற்கொள்ள வேண்டும் என்கிறார். தவம் செய்வதால் மனிதன் ஒருவனுக்குப் பல நன்மைகள் கிடைக்கும் எனக் குறிப்பிடுகிறார். அவ்வகையில் பொருள் கவர்ச்சி நீங்கும், தன்னிலை விளக்கம் கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. அத்தோடு விரும்பிய நல்வழியில் நிற்கும் திறன் கிடைக்கும், ஆசை அளவோடு இருக்கும். அளவோடு ஏற்படும் ஆசையானது பேராசையாக வளராமல் தடுக்கப்படுகிறது. தவம் மேற்கொள்ளப்படுவதால் ஏற்படப் போகும் விளைவுகளை அறிந்து அதன்படி செயற்பட முடியும் என்றும் அயராத விழிப்பு நிலை ஏற்படும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. புற மனத்திற்கு நுட்பமும் வேகமும் அதிகரிப்பதுடன் பொருள்களை நாடிச் செல்வது தடுக்கப்படும் என தவத்தின் மகிமை பற்றியும் தவத்தால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் சிறப்பாக எடுத்துரைப்பதைக் காண முடிகின்றது. சான்றாக மேல்வரும் திருக்குறள் அமைகிறது.

**"வேண்டிய வேண்டியாங்கு எய்தலால்**
**ஈண்டு முயலப் படும்." (குறள் -265)**

## கொடை வழங்கல்

மனிதப் பண்பைக் காட்டும் சிறந்த பண்புகளில் ஒன்று கொடை வழங்கலாகும். பிறருக்கு கொடுத்து உதவும் மனப்பாங்கு உடையவன் முழுப் பக்குவமடைந்த மனிதனாகின்றான். கொடுக்கின்ற மனப்பான்மை உள்ள ஒருவனைச் சிறந்த மனிதனாக்குகிறது. அவ்வகையில் போட்டியும் பொறாமையும் மனத்தில் கொண்டிருத்தல் மற்றும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணம் கொண்டவர்களின் மனம் மிருக குணத்தை அடையச் செய்யும். ஆகவே எவ்விதஆசைகளோ மற்றும் அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாமல் இருத்தல் முதலான பண்புகள் கொடை வழங்குதல் எனும் பண்பின் மூலமாக விருத்தியடையும். அத்தோடு கொடை வழங்குதலே உயிரின் ஊதியம் என்கிறார் வள்ளுவர். ஆகவே இல்லாதவர்களுக்குக் கொடுத்துக் புகழடைதலே பயனுடைய வாழ்க்கையாகும் என வள்ளுவர் கொடை வழங்குதலை வலியுறுத்திக் கூறுகிறார்.

இதனை மேல்வரும் திருக்குறள் சான்று பகர்கின்றது.

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல**
**ஊதியம் இல்லை உயிர்க்கு."**

***(குறள் -231)***

## *நிறைவுரை*

திருக்குறளை ஒட்டுமொத்தமாக ஆராய்கின்ற போது திருக்குறள் முழுவதும் அறம் பற்றிய கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. இல்வாழ்க்கை, துறவறம், அன்புடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, பண்புடைமை, வாய்மை, ஒழுககம், நட்பு, காதல் முதலிய அறங்கள் திருக்குறளில் பொதிந்து கிடப்பதை அவதானிக்கமுடிகின்றது. மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமையவேண்டும். அத்தோடு மனித மனங்களை விரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்காகும். இதற்கு காரணம் திருக்குறள் எழுந்த காலச் சூழலாகும். அறத்தை மாத்திரம் போதிக்கும் மதங்களான சமண பௌத்த மதங்களின் செல்வாக்கால் தென்னிந்திய காலமாக விளங்கும் சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் அதிகம் தோற்றம் பெற்றன. அவ்வாறு எழுந்த நூல்கள் மனிதன் பின்பற்ற வேண்டிய அறப்பண்புகள் தொடர்பாக விரித்துக் கூறுகின்றன. அவ்வாறே திருக்குறளும் அற விழுமியங்கள் பற்றி விபரிக்கின்றன. இத் திருக்குறளானது பிற்பட்ட காலத்தில் அறநூல்கள் மற்றும் அறக்கோட்பாடுகள் தோன்றுவதற்கு அடித்தளமாக அமைந்தது என்று கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை.

## *உசாத்துணைகள்*


1. திருநாவுக்கரசு.த, (2019), "தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் விழுமியங்கள் (கருத்தரங்கம்), பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி.
2. நாராயணசாமி. ஆர், (1997), "திருக்குறள் இனியவுரை", நியூ சென்சரி வுக்ஹவுஸ், சென்னை.
3. அரங்குராசன்.வெ, (2018), "திருக்குறள் சங்க இலக்கிய விழுமியங்கள்-2ஃ2
4. ாவவி:ஃஃறறற.யமயசயஅரவாயடயை. ளைஃஞயபெயடையமமலையஅ.
5. கோபாலப்பிள்ளை.இ, இந்து ஒளி (அகில இலங்கை இந்து மாமன்ற காலாண்டு இதழ்) அகில அகில இலங்கை இந்து மாமன்றம்.
6. புலியூர்க்கேசின், (2010), "புறநானூறு மூலமும் உரையும்"", சாரதா பதிப்பகம், சென்னை.
7. மதுரைத் தமிழ் நாகனார்சு, (1964), "திருவள்ளுவ மாலை, திருக்குறள்" - பரிஆமலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை.